கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,　　　　　　　　　　　　　　　　　　　　தேதி: 22.02.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உடல் உறுப்பு தானம் விழிப்புணர்வு நிகழ்ச்சி

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உடல் உறுப்பு தானம் விழிப்புணர்வு நிகழ்ச்சி 22.02.2025 அன்று ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனை, கோயம்புத்தூர் உடல் உறுப்பு தான பிரிவினைச் சார்ந்த அலுவலர்களால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், அண்ணா அரங்கத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வின் ஒரு பகுதியாக உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவம் பற்றிய நாடகம் ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனை–யின் குழுவினரால் நடத்தப்பட்டது. மேலும் உடல் உறுப்பு தானம் செய்தவர்கள் பற்றிய உண்மைக் கதைகள் ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனையைச் சாரந்த ரஹ்மான் பாசித், உடல் உறுப்பு மாற்று ஒருங்கிணைப்பாளர் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

முனைவர். டி. சுரேஷ்குமார், முதன்மையர், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம் மற்றும் முதன்மையர், மாணவர் நல மையம் (பொறுப்பு) அவர்கள் தலைமையேற்று சிறப்புரை வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மருத்துவமனை மருத்துவர் டாக்டர். டி. ரம்யா மற்றும் பல்கலைக்கழக மருத்துவனை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழிப்புணர்வு நிகழ்வானது மாணவர் நல மைய பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்களால் நடத்தப்பட்டது. தேசிய நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தேசிய நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். இதில் சுமார் 500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**